
ஸ்ரீ





ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீ சீதா பதேய நம:
ஸ்ரீமத்யை கோதாயை நம:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

1. வியாச பராசரர்போல் வேத வேதாந்தங்களை நன்றாக அறிந்தும் மறை பொருளான வேதத்தை எல்லாரும் தெரிந்து கொள்ளும்படியாக அர்த்தங்களை நிர்ணயம் செய்தும், ஸ்ரீ பாஷ்யத்தை நன்றாக சேவித்தவராகவும், பரமஸாதுவாக இருக்கப்பட்டவரைத் தகப்பனாராக அடைந்தேன். மேலும் அடியேனுடைய பெரிய தகப்பனார் சகல சாஸ்திரங்களையும் அறிந்தவராகவும் பகவத் விஷயம், ரகஸ்யத்ரயம், ஆசார்யர் சாதித்த வியாக்யானங்களை நன்றாக அறிந்தவராகையால் அநேகம் பெரியவாள் அவரிடம் காலக்ஷேபம் பண்ணினார்கள். அப்பேர்ப்பட்டவர் அடியேனிடத்தில் பரமகிருபையாக அறிவொன்றுமில்லாத அடியேனுக்கு பகவத் விஷயங்களும் மற்றுமுள்ள ரகஸ்யங்களும் அபலை என்று எண்ணாதே அனுக்ரஹித்தும் திருப்பாவை அர்த்தங்களைத் தெரியும்படி சாதித்தும் ஆழ்வார்கள் ப்ரபந்தங்களின் உட்பொருளை அறியும்படி சாதித்தார் பின்பு சகலமான பெரியோர்களும் கொண்டாடும்படி மணவாள மாமுனி ஸ்வாமியாக எழுந்தருளியிருந்தார்.

சர்வேஸ்வரன் சக்கரவர்த்தித் திருமகனாக அரங்கநாதனை ஆராதித்ததுபோல ஸ்ரீ அகோபில லக்ஷ்மிநரசிம்மன் ஸ்ரீ ஆதிவன் சடகோப ஸ்வாமியாக அவதரித்துத் தன்னை ஆராதித்தும் இதுவரை நாற்பத்துநாலு பட்டத்து அழகிய சிங்காராக அவதரித்து லக்ஷ்மிநரசிம்மனை ஆராதித்துக் கொண்டு எழுந்தருளியிருக்கிறார்கள்.

அடியேனுடைய பர்த்தா விசேஷ ஞானமுடையவராகவும், சகல சாஸ்திரங்களையும் அறிந்துகொள்ளவேணுமென்றும், அழகியசிங்கரிடத்தில் அத்யந்த பக்தியுடையவராகவும் ஸ்ரீ அகோபில மடத்தில் நாற்பத்து ஒன்றா

வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்து ஸ்ரீ லக்ஷ்மிந்ருஸிம்ம சடகோப யதீந்ரமகாதேசிகன் திருவடிகளிலே ஆஸ்ரயித்து, அடியேனையும் அவர் திருவடிகளிலே ஆஸ்ரயிக்கும்படி செய்து, பகவத் விஷயம், ஸ்ரீமத் ரகஸ்யத்ரயஸாரம் மற்றுமுள்ள கிரந்த வியாக்யானங்களும் அழகிய சிங்கர் பரமகிருபையுடன் சாதித்தும், ஆனுகூல்யஸ்ய ஸங்கல்பம், பிராதிகூல்யஸ்ய வர்ஜனம், ரக்ஷிஷ்யதீதி விஸ்வாச: கோப்த்ருத்தவர்ணந்ததா, ஆத்மநிசேஷப கார்ப்பண்யம், ஷட்விதாசரணாகதி: என்கிறபடியே ஆசாரியர் திருவடிகளிலே பரஸமர்ப்பணம் பண்ணிச் சந்தோஷசித்தராய் இருக்கும் பொழுது அவருக்கு முப்பத்தைந்து திரு நக்ஷத்திரத்திற்குள்ளே ஆசார்ய அனுக்ரஹத்தாலே நித்ய விபூதியில் நித்ய சூரிகளோடுகூட ஒரு கோவையாக நித்ய கைங்கர்யம் பண்ணப் பரமபதத்திற்கு எழுந்தருளினர்.

மகா பாவியான அடியேன் பாபம் வேறு ரூபம் வேறு இல்லாமல் பாபமே ப்ரத்யக்ஷமாய் வைதவ்யத்தை அடைந்து ப்ராரப்தம் அவஸ்யம் அனுபோக்தவ்யம் என்கிறபடியே துக்க சாகரத்தில் மூழ்கிக்லேசப்பட்டுக் கொண்டிருக்க மேலும் பெரியவாள் தேடின சொத்துக்களெல்லாம் அநியாயமாக விரயமாகியும், ஆசார்ய கைங்கர்யத்திற்கும், தர்மத்திற்கும் எழுதிவைத்திருந்த சொத்துக்களெல்லாம் வியர்த்தமானதற்குக் காரணம் அடியேன் பண்ணிய பாபத்தினாலேதான் என்று நினைக்கிறேன்.

‘சர்வம், பரவஸம், துக்கம்’ என்கிறபடியே சம்சாரமாகிற சாகரத்திலே விழுந்து கரை ஏறும் வழி தெரியாமல் பாழுங்கிணற்றிலிருக்கும் ஜலஜந்துக்கள்போல் ப்ரக்ருதியாகிற சேற்றில் விழுந்து தவித்துக்கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீ அகோபில மடத்தில் நாற்பத்தி ஒன்றாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் அழகிய சிங்கர் கர்ம, ஞான, பக்தி, ஆசார அனுஷ்டானம் ஒன்றுமில்லாத அடியேனிடத்தில் பரம கிருபையுடனே, ‘நம்முடைய திருவடியில் ஆஸ்ரயித்த ஆத்ம வஸ்து அனர்த்தப்படுவதே’ என்று நினைத்துத் தான் எழுந்தருளியிருக்கும் இடத்திற்கு அழைத்து, சுக்காம் பால்போல் இருக்கும்படியான அடியேனுடைய நெஞ்சில் தங்கும்படி, ஸ்ரீமத் ரகஸ்யத்ரயஸாரம், பகவத் விஷயம், மற்றுமுள்ள ரகஸ்யங்கள், பிரபந்த வியாக்யானங்களெல்லாம் பொருளில்லாத அடியேனுக்கு அருளிச்செய்து ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் வரையில் ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்மனையும், ஸ்ரீ அழகிய சிங்கரையும் சேவித்துக்கொண்டே இருக்கும்படியாக நியமித்தது என்ன கிருபை, என்று ஆச்சரியமாக இருக்கிறது.

திருவடி அசோக வனத்தில் சென்று சீதையைச் சேவித்துவிட்டு வந்து ராமனிடம் "கண்டேன் சீதையை" என்று ரொம்ப சந்தோஷத்துடன் சொல்ல, ஸ்ரீ ராகவன் 'சீதையையும், தம்மையும், ரக்ஷித்த திருவடியைச் சந்தோஷத்துடன் ஆலிங்கனம் பண்ணிக்கொண்டார். அப்பொழுது திருவடி மிகவும் ஆச்சரியமடைந்து பெரிய பிராட்டியாரான சீதை ஏகாந்தத்தில் சக்கரவர்த்தித் திருமகனை அனுபவிக்குமாப்போலே மரத்திற்கு மரம் ஓடித்திரிந்து புளியம்பழம் தின்று ஜீவிக்கும்படியான வானரத்திற்கு இப்படி அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹமான அழகனை ஸேவிக்கும்படி கிடைத்ததே என்று சந்தோஷ மடைந்தார். நவவ்யாகரண பண்டிதரானகையினாலே 'ராமம் கமலபத்ராக்ஷம்' என்று ஸ்தோத்திரம் பண்ணினார். ஸ்ரீமத் அழகியசிங்கர் அற்ப ஞானம்கூட இல்லாத அடியேனுக்கு இவ்வளவு அனுக்ரஹம் பண்ணியதற்குக் காரணம் பெரியவாள் வயிற்றுப் பிறப்பாலும், ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிருந்த பாகவதோத்மர்களின் அனுக்ரஹத்தாலும் என்று நினைக்கிறேன்.

ஸ்ரீ ராமன் விபீஷணாழ்வானுக்குத் தாரகமாக அரெங்கநாதனை எழுந்தருளப்பண்ணிக் கொடுத்ததுபோல், "தயரதன் மகன்தன்னை யன்றி மற்றிலேன் தஞ்சமாகவே" என்கிறபடியே அடியேனுக்கு சீதா சமேதனான ராம லக்ஷ்மணரையும், கோதைமணவாளனான கோவிந்தனையும், ப்ரபன்ன கூடஸ்தரான நம்மாழ்வாரையும், யதிபதியான ராமானுஜரையும் சேவித்துக் கொண்டிருக்கும்படி அடியேனுடைய பிதா அனுக்ரஹித்தார்.

இப்பொழுது ஸ்ரீ அஹோபில மடத்தில் நாற்பத்து நாலாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் அழகியசிங்கர் அனுக்ரஹத்தால் பாகவதோத்தமர்களான ஸ்வாமிகளை எல்லாம் எழுந்தருளப்பண்ணவும் அவர்கள் சாதிக்கும்படியான திவ்யசூக்திகளை எல்லாம் கேட்டு ஆனந்திக்கும்படியாகவும் ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்மனையும், சீதாசமேதனான ஸ்ரீ ராகவனையும், ஸ்ரீமத் அழகிய சிங்கரையும், கோஷ்டியில் எழுந்தருளியிருக்கும்படியான ஸ்வாமிகளுடைய திருவடிகளிலும் அடிபணிந்து தாஸனானேன். ஸ்ரீமத் வேதாந்தயதீந்திர மகாதேசிகன் அடியேனிடத்தில் பரம கிருபையாக இருப்பதால் நித்ய சம்ஸாரியாய்ப் போந்த அடியேனுடைய அபசாரம் பொறுத்து அருள்செய்தருளும்படி அடிபணிந்தேன் அவருடைய திருவடிகளை. ஸ்ரீ அழகியசிங்கர் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் பொழுதும் சதஸிற்குத் திருவள்ளூரில் எழுந்தருளியிருக்கும் பொழுதும்

பொருளில்லாத அடியேனுக்கு விசேஷ அர்த்தங்களை அறியும்படி சாதித்தும், லக்ஷ்மிநரசிம்மனையும் வேத கோஷ்டிகளையும் சேவிக்கும்படி அனுக்ர ஹித்ததுபோல் மறுபடியும் அழகியசிங்கர் சேவை எப்பொழுது கிடைக்கு மென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். 41வது பட்டத்து அழகிய சிங்கர் விபவத்தில் ஸேவை சாதித்தது போருது என்று ஆண்டாள் எழுந் தருளியிருக்கிற திவ்ய தேஸத்தில் அஹோபில மடத்தில் அடியேனுக்காக அர்ச்சாரூபியாய் எழுந்தருளியிருந்து பீதாம்பரம், திருவாபரணங்களெல்லாம் சாத்திக்கொண்டு சேவிக்கும்படி அனுக்ரஹித்தும், லக்ஷ்மிநரசிம்மனுக்குப் பவுன்மாலை, மாங்காய் மாலை, வைரத்திருமண் அநேக திருவாபரணங்கள் சாத்திச் சேவிக்கும்படியாக அனுக்ரஹித்தும் ஸ்ரீ ராகவனுக்கும், ஜனக சுந்தரிக்கும், இளைய பெருமாளுக்கும், கண்ணனுக்கும், நம்மாழ்வாருக்கும், ஸ்ரீ ராமானுஜனுக்கும் சர்வாபரணங்களும் சாத்தி மண்டபத்தில் எழுந் தருளிச் சேவிக்கும்படியும் அவன் திருவடி நிழலில் வஸிக்கும்படியும் அனுக்ரஹம் செய்தாலும், அடியேன் மகாபாவியானதால் பகவானிடத்திலும் பாகவதர்களிடத்திலும் பிரதி பக்தி மாருமல் இருக்கும்படி அனுக்ரஹிக்க வேணுமென்று அழகியசிங்கர் திருவடிகளில் பணிந்து விக்ஞாபித்துக்கொள் கிறேன். வத்திராயிருப்பு ஸ்ரீ ஸேதுநாராயணப்பெருமாளுக்கு காசுமாலை, கல்லட்டிகை சாத்தும்படியாகவும் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹித்தார். ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்மனும் கண்ணனும் எப்பொது சேவை சாதிப்பாரென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு,

ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீமத் அழகியசிங்கர்

திருவடி தாஸபூதை,

**வத்திராயிருப்புச் செல்லம்மாள்.**